**செய்தி வெளியீடு எண்: 254** **நாள்: 04.04.2020**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா நோய் தொற்றினை தடுக்க பன்முக நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்து வரும் அதேவேளையில், பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் பல சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. குறிப்பாக, அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள் ஆகியோருக்கு நிவாரண உதவியையும், அத்தியாவசிய பொருட்களையும் வழங்கி வருகின்றது.

மூன்றாம் பாலினத்தவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக **தற்போது, குடும்ப அட்டை இல்லாத மூன்றாம் பாலினத்தவருக்கு தலா 12 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் கொண்ட தொகுப்பினை வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் குடும்ப அட்டை இல்லாத 4,022 மூன்றாம் பாலினத்தவர் பயன்பெறுவர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**